# சாமுவேல்
# அர்ப்பணிப்பின் விவரிப்பு

*கொல்லாஷியா பகுதியானது ரோமப் பேரரசினால் கைப்பற்றப்பட்ட வேளையில் நிபந்தனையற்ற சரணடைதல் அடையும்படி பேச்சு வார்த்தை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆளுநராக நியமிக்கப்பட்ட எகெரியஸ் என்பவர், கொல்லாஷியா தூதர்களிடத்தில், "கொல்லாஷியாவின் மக்கள் தங்கள் சொந்த வலிமையின் கீழ் இருக்கின்றார்களா?" என்று கேட்டார். உறுதிப்படுத்தப்பட்ட பதில் ஒன்று தரப்பட்ட பொழுது, அடுத்ததாக அவர், "நீங்கள் உங்களையும், உங்கள் கோவில்களையும், உங்கள் பாத்திரங் களையும், எல்லா சொத்துக்களையும் என் கைகளிலும், ரோமாபுரி மக்களின் வல்லமைக்குள்ளும் ஒப்புவிக்கின்றீர்களா?" என்று கேட்டார். அவர்கள், "நாங்கள் எல்லாவற்றையும் ஒப்புவிக்கின்றோம்" என்று பதில் கூறினார்கள். அவர், "நான் உங்களை ஏற்றுக் கொள்கின்றேன்" என்று கூறினார். இந்த விவரிப்பானது, பழைய ஏற்பாட்டில் தன்னை முழுவதும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருந்த ஒரு மனிதரை – சாமுவேல் என்பவரை – நமக்கு நினைவூட்டுகின்றது.*

*சாமுவேலின் வாழ்வானது, தூய்மை, நம்பிக்கை மற்றும் நீதி ஆகிய வற்றின் முறிவுபடாத பதிவேடாக வாசிக்கப்படுகின்றது. மிகவும் மேன்மை யான ஒரு இலக்கு அவரது பச்சிளங்குழந்தைப் பருவத்திலிருந்து கல்லறை வரையிலும் அவர் மீது ஆட்சி செலுத்திற்று. அவரது வாழ்வில் தவறுதல் களோ, காட்டு நெல் விதைகளோ அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல் களோ இல்லாதிருந்தது. பொது வாழ்விலிருந்து அவர் ஓய்வு பெற்ற பொழுது, இன்றைய மக்கள் ஊழியர்(எனப்படுபவர்)கள் மேற்கொள்ளத் துணிவதற்கு கனவிலும் கருதிப் பார்க்காத துணிவான செயல் ஒன்றை அவர் கையாண்டார் – அவர் தாம் ஏதேனும் தவறு செய்திருந்தால், அதை அறிவிக்கும்படிக்கு இஸ்ரவேல் மக்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்! (12:2, 3). மௌனமே அதற்குப் பதிலாயிருந்தது! ஒரு நிகழ்ச்சிகூட (அவருக்கெதிரானதாகக்) கொண்டு வரப்படவில்லை. சாமுவேலின் வரலாறு கரையற்றதாக இருந்தது.*

*சாமுவேலின் வாழ்வைத் தொகுத்துரைப்பதும், ஊழியத்தின்பால் அவரது எண்ணப்போக்கை விவரிப்பதுமான வார்த்தை, அர்ப்பணிப்பு என்பதாகும். அவர் அன்னாளின் வயிற்றில் கர்ப்பந்தரித்த நாள் முதற் கொண்டு, தமது கடைசி மூச்சை விட்ட நாள் வரைக்கும், அவர் தேவனுக் குத் தன்னை அர்ப்பணித்த மனிதராயிருந்தார். இந்த அர்ப்பணிப்பானது எல்லாக் காலங்களிலும் இருக்கும் எல்லா மனிதர்களுக்கும், வார்த்தையிலும்*

செய்கையிலும் அவர்களின் அர்ப்பணிப்பு குறித்து இடிமுழுக்கத்திற்கு ஒப்பான அறைகூவலை வெளியிடுகின்றது.

## இளம் வயதினருக்கு: ஆவலான அர்ப்பணிப்புக்கான அறைகூவல் (2:11, 18-21; 3:1-21)

சாமுவேலின் தொடக்க ஆண்டுகள் இரண்டு இடங்களில் செலவிடப் பட்டன. முதலாவது, அவர் தம் பெற்றோர்களுடன் இராமாவில் இருந்தார். அநேகமாக, அவர் தமது வாழ்வின் முதல் மூன்று ஆண்டுகளில் அங்கு வாழ்ந் திருப்பார். இல்லத்தில் அவர், உதாரணங்கள், ஜெபங்கள், மற்றும் அன்பார்ந்த அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் மூலம் ஆழமான மற்றும் நிரந்தரமான மனப்பதிவுகளைப் பெற்றார். இந்தத் தொடக்க கால மனப் பதிவுகள் அவரைப் பொல்லாங்கிலிருந்து காத்து நன்மையை நோக்கி இயக்குகின்ற கொள்கைகளை அவருக்குள் நிலைநாட்டின. இந்தத் தொடக்க ஆண்டுகளில் இருந்தே, சாமுவேல் தாம் யெகோவாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததைப் புரிந்து கொண்டிருந்தார். அர்ப்பணிப்பின் கருத்து அவருக்குப் புரிந்து கொள்வதற்குச் சுலபமாயிருந்தது, ஏனெனில் அதைப் பற்றி அவரது பெற்றோர்கள் முன்மாதிரியினாலும் போதனை யினாலும் அவருக்கு விளக்கப்படுத்தினர்.

சீலோவில் இருந்த ஆசரிப்புக் கூடாரம் சாமுவேல் தனது பிள்ளைப் பிராயத்தில் தங்கியிருந்த இரண்டாவது இடமாக இருந்தது. சீலோவில் சாமுவேல் இஸ்ரவேலரின் ஆராதனைக்குரிய விஷயங்களில் அன்றாடம் தொடர்பு கொண்டிருந்தார். அங்கிருந்த பரிசுத்த நடைமுறைகள் அவரை அவரது பிற்கால வாழ்வுக்கென்று படிப்படியாக, உறுதியாக, மற்றும் மாற்ற இயலாத வகையில் உருவாக்கின.

சாமுவேலின் இளம் வயது அர்ப்பணிப்பின் பேராவலானது பின்வரும் விவரங்களினால் தெளிவாகின்றது: அவர் தமது இளம் வயதில் பொல்லாங் கான ஆதிக்கங்களுக்கு ஆட்படும் வகையில் இருந்திருப்பினும், தேவனுக்கு உண்மையுள்ளவராக நிலைத்திருந்தார். சாமுவேலின் வயதைப் பற்றிய குறிப்பானது அவர் ஏறக்குறைய பதினைந்து வயதுள்ளவராக இருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கின்றது (2:18; 3:1). இந்த வயது பெரும்பாலும் கலக்கம், மீறுதல், மன அழுத்தம் மற்றும் ‘‘கும்பலைப் பின்பற்றிச் செல்வதற்கு’’ ஒருவர் சுலபமாக அடித்துச் செல்லப்படுதல் என்பவற்றின் வயதாக உள்ளது. இந்த அழுத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிர்கொண்டு நின்ற சாமுவேல் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலுடன் நிலைத்திருந்தார். சாமுவேலை எதிர் கொண்டிருந்த மிக அபாயமான ஆதிக்கங்களில் ஏலியின் மகன்களும் இருந்தனர். ஓப்னி, பினெகாஸ் என்ற அவ்விருவரும் தங்கள் பொல்லாத செயல்களில் சாமுவேலைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளும் படிக்கு ஊக்கப்படுத்தியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை, ஆனால் சாமுவேல் அசைந்து கொடுக்கவில்லை. தேவனிடத்தில் அவர்கள்

*கொண்டிருந்த விரோதம், மாறுபாடு மற்றும் கலகம் ஆகியவற்றை அவர் (சாமுவேல்) பகிர்ந்து கொண்டிருக்க முடியும், ஆனால் சாமுவேல் ஒருக்காலும் அலைபாய்ந்து விடவில்லை. சாமுவேலின் விடலைப் பருவ உடலானது அவ்விரண்டு முதிய பையன்களின் ஆபாச நடக்கையுடன் இணைந்து கொள்ளும்படிக்குச் சோதிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் சாமுவேல் அர்ப்பணிப்பு நிலையிலேயே தொடர்ந்து நிலைத்திருந்தார். சாமுவேல் பொல்லாங்கின் செல்வாக்கினால் எதிர்கொள்ளப்பட்ட போதிலும் ஒழுக்கத்திலும், ஆவிக்குரிய நிலையிலும் பலத்து வளர்ந்தார் (2:21; லூக். 1:80). சாமுவேலின் நடக்கையானது ஒப்னி, பினெகாஸ் ஆகியோரின் நடக்கைக்கு நேர்மாறானதாக இருந்தது. அவர்கள் அநேகமாக ஒரே வயதுடையவர்களாக இருந்தார்கள், ஆனால் அவர்கள் முற்றிலும் மாறுபட்டவர்களாய் இருந்தார்கள்! (2:12, 18; 2:25, 26; 3:13, 19, 20). இதற்கு என்ன விளக்கம் இருந்தது? சாமுவேல் தமது இளம் பிராயத்திலேயே தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தார்! சாமுவேல் தேவன் கூறுவதை ஆர்வத்துடன் கவனித்துக் கேட்கும் இளைஞராய் இருந்தார் (3:10). சாமுவேலின் வாழ்வு பற்றித் தொகுத்துரைக்கும் ஒரு வசனத்தைக் கண்ணோக்க நீங்கள் விரும்பினால், அது 3:10 என்பதாகவே உள்ளது. அவரது வாலிப வயதில் "கீழ்ப்படிதல்" என்பதே அவருடைய கவனிப்பு வார்த்தையாக இருந்தது. அவர் தேவன் மீது ஆழமிக்க பயபக்தியைப் பற்றிக் கொண்டிருந்தார். "கேட்கிறேன்" என்ற வார்த்தையானது நின்று கொண்டு உடனடியாகக் கீழ்ப்படியத் தயாராக உள்ள ஒருவரைக் குறிக்கின்றது. இளைஞர்களே, இந்த வார்த்தை உங்களைப் பற்றி விவரிப்பதாக உள்ளதா? நீங்கள் (உங்களைத்) தேவனுக்கு அர்ப்பணித்தவர்களாய் இருந்தால், நீங்கள் தேவனுடைய கட்டளைகளைக் கேட்கையில் கீழ்ப்படியத் தயங்காமல், மனப்பூர்வமாய் அதைச் செய்வீர்கள் (பிர. 12:1, 6).*

*சாமுவேல் எல்லாராலும் மதிக்கப்பட்ட இளைஞராயிருந்தார் (2:26; 3:21; 4:1அ). அவர் பொறுப்புக்களை ஏற்று நடத்த தயாராயிருந்த ஒரு இளம் வயதுப் பையனாயிருந்தார் (3:15). கூடாரத்தின் கதவுகளைத் திறத்தல் என்பது மிக முக்கியமான பணிப் பொறுப்பாக இருந்தது. அவரது பொறுப்பு வாய்ந்த நடக்கைகளினிமித்தமாக தேவனுடைய மனிதன் என்ற வகையில் அவரது புகழ் வளர்ந்தது. இளைஞர்களே, இந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு, உங்களைச் சுற்றியிருப்பவர்கள் உங்களை மதிக்கும்படி பொறுப் புள்ள வழிகளில் நடந்து கொள்ளுங்கள் (இ.வ. நீதி. 3:1, 4; 1 தீமோ. 4:12, 15; 5:22ஆ).*

*சாமுவேலின் வாழ்வு இராமாவில் தொடங்கிற்று மற்றும் அது சீலோவை நோக்கி நகர்ந்தது. அவரது பிள்ளைப் பருவம் மற்றும் இளமைப் பருவ ஆண்டுகள் சீலோவில் ஊழியத்தில் கழிந்தன. அவர் மனிதப் பருவத்திற்குக் கடந்து செல்லுகையில், அவரது நிலைப்பாடு பாதுகாப்புள்ள தாக இருந்தது (3:19 4:1). சீலோவில் தொடக்க நிலைத் தரிசனம், இஸ்ரவேலருக்கு முன்பாக அவரது வார்த்தைகளை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துதல், மற்றும் அவரது மதிப்பிற்குரிய பாவனைகள் ஆகியவை அவருக்கு மனிதப் பருவத்திற்கு அவரை எடுத்துச் சென்ற மதிப்பையும்*

*தைரியத்தையும் கொடுத்திருந்தன.*

## *வயது வந்தவர்களுக்கு: பின்மாற்றமில்லாத அர்ப்பணிப்பின் அறைகூவல் (7:1-17)*

*தேவனுடைய தீர்க்கதரிசியாக நிலைநாட்டப்பட்ட பின்பு வெகுவிரைவிலேயே சாமுவேல் சீலோவிலிருந்து சென்று விட்டார் என்று தோன்றுகின்றது. உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டதைத் தொடர்ந்து (4:11), சீலோ பிலிஸ்தியர்களின் கைகளுக்குள் விழுந்தது (சங். 78:60 முதல்). இஸ்ரவேலர்கள் பிலிஸ்தியர்களின் அடக்குமுறையின் கீழ் துன்புற்றுக் கிடந்தனர். இராமாவில் சாமுவேலின் பிரசன்னமானது பல்வேறு வழிகளில் விளக்கியுரைக்கப்படுகின்றது. அவர் எல்க்கானாவிடத்திலிருந்து காணியாட்சிகளை இவ்விடத்தில் பெற்றுக் கொண்டதாகச் சிலர் தெரிவிக்கின்றனர். மற்றவர்கள், சீலோவின் ஆராதனையில் ஓப்னி மற்றும் பினெகாஸ் ஆகியோரின் முற்றான பிறழ்வு நடக்கையினிமித்தமாக அவர் சீலோவுக்கு சென்று விட்டார் என்று தெரிவிக்கின்றனர். ஆனால் இராமா சாமுவேலின் தலைமையிடமாயிற்று.*

*சாமுவேல் இராமாவிலிருந்து கொண்டு மனந்திரும்புதலை வற்புறுத்தி இஸ்ரவேலுக்குள்ளே இருபதாண்டுகளைக் கழித்தார். 7:3ன் வார்த்தைகள் சாமுவேலின் வேண்டுகோள்களைத் தொகுத்துரைக்கின்றன. இருபதாண்டுகள் பிரசங்கித்த பின்பு சாமுவேல் மிஸ்பாவில் இஸ்ரவேலர்களை ஒன்றுகூட்டி அங்கு அந்த இனம் முழுவதும் யெகோவாவிடம் திரும்ப வேண்டியதை அறிவித்தார். மிஸ்பாவில் நடந்த இந்தக் கூடுகையானது சாமுவேல் தனது வயது வந்த காலத்தில் கொண்டிருந்த பின்மாற்றமில்லாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.*

*சாமுவேலின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதில், வயது வந்தவர்கள் பின்வரும் விஷயங்களில் அர்ப்பணிப்புடன் இருக்கும்படிக்கு அறைகூவல் விடப்படுகின்றனர்.*

*முழு இருதயத்துடன் மனம்மாறும்படி அழைப்பதற்கு சாமுவேல் அஞ்சாமலிருந்தார் (7:3). அவர் அக்கிரமத்தைக் கடிந்து கொண்டார் மற்றும் இஸ்ரவேலர்கள் புறதெய்வக்காரர்களின் நடைமுறைகளில் இருந்து முற்றிலும் பிரிந்து வர வேண்டும் என்று வலியுறுத்தினார். இஸ்ரவேலர்கள் தங்கள் பாவங்களின் பேரளவை உணர்ந்து, தேவன் மீது நம்பிக்கை கொள்வதின் அவசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று சாமுவேல் விரும்பினார். சாமுவேல் பாவத்தைக் கண்டனம் செய்தார், ஒருக்காலும் அதனைப் பொறுத்துக் கொண்டு போனதில்லை. அவர் முற்றான மனந்திரும்புதலைத் தீவிரமாக வேண்டினார்! இஸ்ரவேலர்கள் தேவனுடன் ஒப்புரவாக வேண்டும் என்றும் அவர்களை அவர் ஊக்கப்படுத்தினார் (7:5). அவர், நீதியை உணர்த்தி உயிரூட்ட எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருந்தார். அவர் இஸ்ரவேலர்களிடம் வேண்டுகோள் விடுத்து,*

*கெஞ்சிக் கேட்டு, மற்றும் வாதிட்டுக் கொண்டிருந்தார்.*

*அடுத்ததாக, அவர் உயர்வான மதிப்பைப் பெற்றுக் கொண்டிருந்தார் (7:6). சாமுவேல் தமது செல்வாக்கின் மூலமாக இஸ்ரவேலரை ஒன்றுகூடி வரும்படி செய்தார். அந்த இனமானது தேவனை நோக்கி தனது பாவங்களையும் முரட்டாட்டங்களையும் அறிக்கையிட்டது. இங்குதான் சாமுவேல் இஸ்ரவேலின் மீது "நியாயாதிபதியாக" நியமிக்கப்பட்டார்.*

*இவர் நடத்துவத்தை அளித்தார் (7:8). இஸ்ரவேலர்களுக்கு உதவி தேவைப்பட்ட பொழுது, அவர்கள் தங்களை வழிநடத்திச் செல்லக் கூடிய ஒருவரைக் கண்ணோக்கினார்கள். சாமுவேலின் வாழ்வு, முன்மாதிரி, மற்றும் போதனை யாவும் இணைந்து அவரை ஒரு மாபெரும் தலைவராகத் தகுதிப்படுத்தின.*

*சாமுவேல் ஜெபித்தார் மற்றும் ஜெபத்தைச் சார்ந்திருந்தார் (7:9). சாமுவேலின் ஜெபத்தினுடைய வல்லமையானது இஸ்ரவேல் முழுவதிலும் அறியப்பட்டிருந்தது. சாமுவேலின் ஜெபத்தில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். தேவன் சாமுவேலின் வேண்டுகோள்களைக் கேட்டு அவற்றிற்குப் பதிலளித்தார். தேவனை நோக்கி ஜெபித்தவர்களில் பிரதானமானவர்களில் ஒருவராக சாமுவேலை சங்கீதம் 99:6 குறிப்பிடுவதென்பது கவனிக்க ஆர்வத்திற்குரியதாக உள்ளது. சாமுவேல் இஸ்ரவேலுக்கான தமது வேண்டுதல்களில் பயன்படுத்திய ஜெப வல்லமையைக் குறித்து எரேமியா 15:1ல் கூறுகின்றார். இஸ்ரவேலின் விடுதலைக்காக சாமுவேல் ஜெபித்தார் என்பதையும் அவரது ஜெபம் அவர்களுக்கு யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுத் தந்தது என்றும் இஸ்ரவேலில் இருந்த யாவரும் அறிந்தார்கள் (7:8; 8:6). சாமுவேல் ஒரு தளபதியாகவோ, ஒரு யுத்த வீரராகவோ, அல்லது படை ஆலோசகராகவோ இருந்ததில்லை. அவரால் ஆயுதங்களைத் தர முடியவில்லை, ஆனால் அவரால் ஜெபிக்க முடிந்தது. அதுவே யுத்தத்தில் வெற்றியைத் தந்தது! (7:10, 11).*

*இஸ்ரவேலானது தேவனைச் சார்ந்திருக்க வேண்டியது பற்றித் தொடர்ந்து அவர்களுக்கு அவர் நினைவூட்டிக் கொண்டிருந்தார் (7:12). தேவனுடைய பெலத்தினாலேயே இஸ்ரவேல் நிலைத்திருந்தது என்பதை அவர் எப்பொழுதும் வலியுறுத்தினார்!*

*சாமுவேல் சமாதானம், இணக்கம் மற்றும் ஆசீர்வாதம் ஆகியவற்றிற்குக் காரணரானார் (7:13, 14). சாமுவேல் தமது போதனைகளினால் கோத்திரங்களுக்கு இடையில் இருந்த பொறாமை மறையும்படி செய்தார் மற்றும் பிரிந்து கிடந்த நாட்டை அவர் ஒன்றாக்கினார். இவ்விதமாக அவர் இஸ்ரவேலின் "ஒன்றுபட்ட இராஜ்யத்திற்கு" வழியை ஆயத்தம் செய்தார்.*

*நிறைவாக, அவர் தேவனுடைய சித்தத்தைப் போதிப்பதில் ஈடுபட்டார் (7:16). இஸ்ரவேல், தேவனுக்கென்று உண்மையாய் நிலைநிற்க வேண்டுமென்றால் அவர்கள் தேவனுடைய வசனத்தை அறிந்திருக்க வேண்டும் என்று அவர் அறிந்தார். இஸ்ரவேலுக்குள் இன்னும் விரிவாக்கப் போதனையில் பயன்படுகின்ற வகையில் அவர் தாமே "தீர்க்கதரிசிகளின் பள்ளி களை"த் தொடங்கினார் (19:3-5, 23, 24; 2 இரா. 2).*

*இவ்விதமாக, இளமைப் பருவத்தின் உத்வேகமும் வலிவும் குன்றிய*

பொழுதிலும் கூட, சாமுவேலின் அர்ப்பணிப்பானது அவருடைய வயதான காலத்திலும் நிலைத்து நின்றது. பல பிரச்சனைகளை எதிர் கொண்டிருந்த சாமுவேல் வேகம் தணிந்து போயிருக்கலாம். இஸ்ரவேலர்களை மிஸ்பாவில் கூட்டிச் சேர்க்க அவருக்கு இருபதாண்டுக் காலத்திற்குச் சீரான போதனை தேவைப்பட்டது. ஆனால் சாமுவேல் "பின்மாற்றம் இல்லாதவராகக்" காணப்பட்டார். பயம், மன அழுத்தம் மற்றும் பாவம் ஆகியவற்றுடன் போராடிக் கொண்டிருக்கும் வயது வந்தவர்கள் சாமுவேலை உற்று நோக்குவதும் அவர் செய்தது போலவே பின்மாற்றமின்றி இருக்க வேண்டியதும் அவசியமாகும். அவருடைய தீர்மானத்தை வயது வந்தவர்கள் தங்கள் வாழ்வில் செயல்விளக்கப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

## மூத்த பரிசுத்தவான்களுக்கு: நிறைவளிக்கும் அர்ப்பணித்தலுக்கான அறைகூவல் (8:1-22; 9:6, 15-10:1, 17-25; 12:1-7, 19-25)

சாமுவேலின் வாழ்வின் பிற்பகுதியில், அவரது அர்ப்பணிப்பும் பின்வாங்கிப் போகாத உறுதிப்பாடும் குறைவுபடாதிருந்தது. இந்த முடிவு ஆண்டுகளின் காலத்தில்தான், ஒருவர் தன் வாழ்வைப் பின்னோக்கிப் பார்ப்பதில் நிறைவடைதல் பற்றிய பாடம் கண்டறியப்படுகின்றது. சிலர் பூமிக்குரிய இருப்பின் ஆண்டுகளைக் கண்ணோக்கி துக்கத்துடன் திரும்புகின்றனர், ஆனால் சாமுவேலைப் பொறுத்தமட்டில் விஷயம் அவ்வாறு இருந்ததில்லை. சாமுவேலின் வாழ்வு வீணாகச் செலவிடப்பட்டிருந்ததில்லை, மற்றும் அவர் கடந்த காலத்தை நினைவுகூருவதில் ஆறுதல் தரும் நிறைவைக் கண்டறிந்தார்.

முதலாவது, சாமுவேல் தமது வாழ்நாள் முழுவதிலும் தேவனுக்கென்று அர்ப்பணித்திருந்தபடியினால் நிறைவடைந்தார். அவருடைய வாழ்வானது எப்பொழுதுமே நன்மை தீமை ஆகியவற்றிற்கிடையில் உள்ள வித்தியாசத்தை பிறருக்கு காண்பித்திருந்தது (8:1-15). சாமுவேலுக்கு எதிராக, சாத்தியப்பட்ட வகையில் கூறக்கூடிய ஒரே குற்றச்சாட்டு அவரது மகன்களைப் பற்றியதாக மட்டுமே இருக்கின்றது, ஆனால் அதுவும் கூட ஏலியின் மகன்களைக் குறித்துக் கூறப்பட்டது போல் அவ்வளவு மோசமான குற்றச்சாட்டு அல்ல (2:29; 3:13). வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் கூட சாமுவேலைப் பற்றி தக்க வகையில்லாத பெற்றோர்த்துவம் அல்லது அவரது மகன்களின் தவறுகள் பற்றி குற்றம் சாட்ட இயலாது போயிற்று. ஏன்? அவர்களின் செயல்பாடுகளை சாமுவேல் மன்னித்து விட்டுவிடவில்லை (12:2). சிலர், சாமுவேல் தனது மகன்களை பொது ஊழியத்திற்குப் புறம்பாக பிறர் "மத்தியில்" வைத்துவிட்டாரென்று கருத்துத் தெரிவிக்கின்றனர். மூப்பர்கள் வந்த பொழுது, அவர்கள் சாமுவேலின் நேர்மை பற்றி கேள்வி எழுப்பாமல், அவரது அர்ப்பணிப்பை தாராளமாய் ஒத்துக்கொண்டனர். சிலருக்கு, முதிர்வயது என்பது பல ஆண்டுகளாகப் பற்றிப் பிடிக்கப்

பட்டிருந்த மதிப்பீடுகளைத் தணித்துக் கொள்ளும் காலமாக உள்ளது. அது தவறுக்கான விமர்சனத்தை மென்மையாக்கும் காலமாக, மற்றும் தவறுகள் மன்னிக்கப்படும் காலமாக, விசேஷமாக குடும்ப உறுப்பினர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கும் காலமாக உள்ளது. ஆனால் சாமுவேலின் விஷயத்தில் இவ்வாறு இருந்ததில்லை! அவர் உறுதியானவராகவே நிலைத்திருந்தார் (சங். 92:12-15; ஓசியா 12:6; எபி. 10:23).

இரண்டாவது, சாமுவேல் யெகோவாவிற்கான தமது பற்றுறுதி இன்னமும் பெரும் உணர்வுடன் இருந்தபடியினால் நிறைவடைந்தார் (8:6). அரசர் வேண்டும் என்ற இஸ்ரவேலின் வேண்டுகோளானது அவர்கள் தங்களின் புறதெய்வ வழிபாட்டாளர்களான அயலகத்தவர்கள் போலிருக்க உண்மையில் விரும்பியதைக் காட்டிக் கொடுத்து விட்டது. இது சாமுவேலுக்குப் "பிரியமற்றதாக" இருந்தது. இந்த வார்த்தையானது, உணர்வுகளில் புண்பட்ட, கோபமுள்ள மற்றும் எரிச்சல் கொண்ட என்று குறிப்பிடுகின்ற எபிரெய வார்த்தையிலிருந்து வருகின்றது. அந்த வேண்டுகோளை சாமுவேல் கேட்ட பொழுது, அவர் கோபமடைந்தார். அவரது உணர்வுகள் புண்பட்டன. ஆனால் அது, அவர்கள் தன் மகன்கள் மீது குற்றம் சாட்டியதற்காகவோ அல்லது அவர் மிகவும் முதியவராகி விட்டார் என்று கூறியதற்காகவோ ஏற்படவில்லை, ஆனால் இஸ்ரவேலர்கள் தேவனைப் புறக்கணித்து விட்டதாலேயே அவர் (சாமுவேல்) கோபமடைந்தார்! ஒன்று சாமுவேல் 10:17-25 வசனப் பகுதியானது சாமுவேல் உணர்ந்த ஆழமான புண்படுதலை வெளிப்படுத்துகின்றது. மிகப் பெரிய எதிர்ப்புக்கு முன்னிலையில் சாமுவேல் தேவனைக் கனப்படுத்தும்படிக்கு எழுந்து நின்றார். அவர் வயதின் காரணமாக அமைதி காத்து நின்று விடவில்லை அல்லது அவரது வயது அவர் தம் உணர்வுகளை ஊக்கம் குன்றிச் செல்ல அனுமதிக்கவில்லை. அர்ப்பணித்தல் என்பது சர்வ வல்லவருக்காக பற்றுறுதியுடன் போராடும் பொழுது இருப்பதைக் காட்டிலும் வேறு எப்பொழுதும் அதிக வனப்புடன் திகழ்வதில்லை (சங். 71:9; பிலே. 9).

மூன்றாவது, சாமுவேல் தமது வாழ்க்கை வரலாற்றினால் நிறைவடைந்திருந்தார் (9:6). அவரது பெயரானது (எல்லாருடைய மனதிலும்) மதிப்பையும் உறுதிப்பாட்டையும் உதிக்கச் செய்தது. "அவர் தேவனுடைய மனிதர்" என்று அறியப்பட்டிருந்தார். அவர் தமது வாழ்நாளின் பிந்திய காலத்தில் தமக்கு மாபெரும் மகிமையைக் கொண்டுவரும் வகையில் தமது முந்திய ஆண்டுகளில் வாழ்ந்திருந்தார். இங்கு எல்லாரும் விரும்பிப் பிரயாசப்பட வேண்டிய பாராட்டுதல் ஒன்றுள்ளது. நமது பிந்திய ஆண்டுகளில், நாம் உயர்வாக மதிக்கப்படுவோமா? (1 நாளா. 29:28; நீதி. 16:31).

நான்காவது, சாமுவேல் தாம், தயங்கியவர்களை ஊக்கப்படுத்தவும் அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்வதற்குரிய சாத்தியக் கூற்றை உணர்ந்தறிய உதவவும் நாடியிருந்ததால் நிறைவடைந்திருந்தார் (9:20, 21). ஏனெனில், ஒருவேளை, எழுபது ஆண்டுகள் அளவாக, அவர் இஸ்ரவேலை தேவனுக்கு ஊழியம் செய்ய திருப்புவதிலும் தேவனே அவர்களின் அரசர் என்று அவர்களை உணர்ந்தறியச் செய்வதிலும் தம்மையே அர்ப்பணித்திருந்தார். இப்பொழுது அவர் அந்த ஓட்டத்தைக் கைவிட்டு எதிர்த் திசை

*யில் செல்ல வேண்டியதாயிற்று! இது அவரது மிகச் சிறந்த நியாயத் தீர்ப்புக்கு எதிரானதாயிருந்தது. அவர் முதிர் வயதுள்ளவரானார் மற்றும் தமது வழிகளில் அமைவு பெற்று விளங்கினார்; எது மிக மிகச் சிறந்த ஒட்ட மென்பதை எவ்வித ஐயமுமின்றி அவர் அறிந்திருந்தார், இருப்பினும் அவர் மாற வேண்டியிருந்தது! (8:22). சாமுவேல், புதிய முடியரசின் ஒப்புக் கொடுத்தல் மிகுந்த திறமை வாய்ந்த மேம்பாட்டாளராகியிருந்தார். அதன் உருவாக்கத்தில் அவர் ஒழுங்கமைப்பு மற்றும் ஆலோசனையளித்தல் ஆகிய வற்றைச் செய்தார். இந்தச் செயல்பாடுதான் சாமுவேலை உண்மை மிகுந்த கதாநாயகராக தனிப்படுத்திக் காண்பித்தது! அவர் சவுலை ஊக்கப்படுத்தி, அவரை வழிநடத்தி, அவருக்கு ஆலோசனை அளித்தார். சவுலை மாபெரும் அரசராக்கியவர் சாமுவேல்தான். நாம் விட்டுக் கொடுத்துவிடும்படி, நமது உரிமையைத் துறந்து விடும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்ற பொழுது வழக்கமாக நடைபெறுவது என்ன? நாம் மாற்றத்திற்கெதிராக உதைத்துப் போராடும்படி சோதிக்கப்படுகின்றோம், மற்றும் நாம் விட்டுக் கொடுத்து விடுவதாயிருந்தால், அதை நாம் முறுமுறுப்போடும், மனவிருப்பமின்றியும் செய்கின்றோம். இது போன்ற சூழ்நிலையை எதிர்கொள்ளும் பொழுது, சாமுவேல் தமது முதிர் வயதில் நிறைவடைந்திருந்ததையும், மாறியதையும் பின்பு தேவனுடைய மக்களுக்கு ஒவ்வொரு வகையிலும் உதவியதையும் நினைவுகூருங்கள்! (1 கொரி. 9:19-23; அப். 10:14). விசுவாசம் நிறைந்த பரிசுத்தவானுடைய எண்ணப்போக்கு இவ்விதமானதாகவே உள்ளது (பிலி. 2:3, 4).*

*ஐந்தாவது, சாமுவேல் தேவனுக்காகத் தமது வாழ்நாள் முழுவதையும் கழித்தது பற்றி வருத்தங்கள் எதுவும் கொண்டிராதபடியினால் நிறைவடைந்தார். 12:1-7ல் சாமுவேல் தமது வாழ்வை மறுகண்ணோட்ட மிட்டார். அங்கு கூடியிருந்த யாவராலும் அது நன்கு அறியப்பட்டிருந்தது (12:2ஆ). அவரது பணி வாழ்வானது குற்றமற்றதாகவும், தேவனை கனப்படுத்தியதாகவும் இருந்தது. அவர் மாறுபாடான ஏதொன்றையும் செய்ய மாட்டார். தனது வாழ்வை மறு கண்ணோட்டமிட்டு, எவ்வித திருத்துதலும் செய்யத் தேவையில்லை என்று காண்கிற மனிதர் எவ்வளவு பாக்கியவானாக இருக்கின்றார்! கர்த்தருக்கென்று அர்ப்பணித்தல் மற்றும் ஒப்புக்கொடுத்தல் ஆகியவற்றின் ஆசீர்வதிக்கப்பட்ட கனி இப்படிப்பட்ட தாகவே உள்ளது (2 தீமோ. 4:6, 7).*

## *மரணத்தில்: வெகுமதியைப் பெற்ற அர்ப்பணித்தலுக்கான அறைகூவல் (25:1; 28:12-19)*

*சாமுவேல் தமது மரணத்தின்போது, அவரது மரணம் ஒரு பேரிழப்பு என்று (மக்களால்) கருதப்பட்டது. அவரது வாழ்வானது மாபெரும் செயல்வலிவை ஏற்படுத்தியிருந்தது. “இஸ்ரவேல் எல்லாரும் கூடிவந்து ...” துக்கங்கொண்டாடினர் (25:1; ஆதி. 15:15).*

*எந்தோர் என்ற இடத்திலிருந்த அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடத்தில் சவுல் சென்ற நிகழ்ச்சியானது (28:12-19) சாமுவேலின் மரணம் குறித்து பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்திற்று: அவர் தமது இளைப் பாறுதலை "மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருந்தார்" (28:15); அவரது நினைவானது பயபக்தியையும் மரியாதையையும் வெளிக் கொண்டு வந்தது (28:15ஆ); மற்றும் சாமுவேல் தமது மரணத்திற்குப் பிறகும் கூட அர்ப்பணித்தலை வலியுறுத்திக் கொண்டிருந்தார் (28:18, 19).*

*சாமுவேல் செய்தது போல, மரித்தவர்கள் உயிரோடிருப்பவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளுதல் என்பது சாத்தியமற்றதாகியிருந்தாலும், அவர்கள் (மரித்தவர்கள்) சாமுவேலைப் போல வாழ்ந்திருந்தால், அவர் களின் அடைவிடம் குறித்து இன்றும் நாம் உறுதிப்பாட்டை ஆதாயப் படுத்திக் கொள்ள இயலும். இவ்வாழ்வில் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலு டன் வாழ்கின்ற எவரும் இவ்வாழ்வை விட்டுப் பிரிகின்ற வேளையில் இனிமையான இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள் (வெளி. 14:13). விசுவாசமிக்கவர்களின் நினைவானது பயபக்தியையும் மதிப்பையும் வெளிக் கொண்டு வரும் (எபி. 12:1; 13:7). பிரிந்து சென்றுள்ள பரிசுத்த வான்கள் தங்களின் பூமிக்குரிய எடுத்துரைப்புகளின் மூலமாக, நாம் யெகோவா தேவனுக்கு அர்ப்பணிப்புடன் நிலைத்திருக்கும்படி புத்தி கூறுகின்றனர்.*

## *முடிவுரை*

*சாமுவேலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அவரது வாழ்வு நேசிக்கத் தகுந்ததாக இருந்தது. அவர் ஒரு சிறுவனாயிருந்த பொழுதே, தன்னை ஆர்வத்துடன் தேவனுக்கு ஊழியம் செய்வதற்காக அர்ப்பணித் தார். அவர் வயது வந்தவராயிருக்கையில் சத்தியத்தை உயர்த்திப் பிடிப்பதற் காகவும் தவறை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்காகவும் மற்றும் இஸ்ரவேலை தேவனிடத்தில் திரும்பச் சேர்ப்பதற்காகவும் பின்மாற்ற மில்லாத வகையில் தம்மையே அர்ப்பணித்தார். முதிர் வயதான குடிமகன் என்ற வகையில் அவர் நரை முடியுடன் வயதில் மூப்படைந்த வேளையில் நிறைவடைந்தவராக இருந்தார். பிரிந்து சென்ற பரிசுத்தவான் என்ற வகையில் அவரது அர்ப்பணிப்பானது இளைப்பாறுதல், மதிப்பு மற்றும் ஊக்கமூட்டுதல் என்ற வெகுமதிகளை விளைவித்தது.*

*சாமுவேலின் அர்ப்பணிப்பானது அவரை, குற்றமற்ற வகையில் தூய்மையாகவும் தனது காலத்தில் வாழ்ந்த பிறரைக்காட்டிலும் மேலான வராகவும் இருக்கும்படிக்குப் பெலன் அளித்தது. இஸ்ரவேலுக்கு அவரது பங்களிப்பானது, இஸ்ரவேலின் ஒழுக்கச் சீர்கேட்டை ஒடுக்குகின்ற பரிசுத்த பண்பாகவும், தாவீது ராஜா மூலமாக வரவிருந்த மேசியாவுக்கு அஸ்திபாரம் இடுவதாகவும் இருந்தது. நீங்கள் உங்கள் வாழ்வின் எந்தக் கால கட்டத்தில் இருந்தாலும், சாமுவேலின் வாழ்வானது, நீங்கள் உங்களைத் தேவனுக்கு அர்ப்பணிக்கும்படி வற்புறுத்துகின்றது (12:24). யெகோவாவிற்கு அர்ப்பணித்தல் என்பது எப்பொழுதும் வெகுமதி அளிக்கப்படுகின்றது*

*என்பதை, அவர் (தமது) தொட்டிலில் இருந்து மூத்த பரிசுத்தவானின் கல்லறை வரையிலும் நமக்குக் காண்பிக்கின்றார் (ஏசா. 46:3, 4).*

*யூதர்கள் தங்கள் ஆடுகளில் பத்தில் ஒரு பகுதியை பின்வருமாறு தேர்வு செய்வது அவர்களின் வழக்கமாயிருந்தது. ஆட்டுக்குட்டிகள் அவைகளின் தாய்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஒரே ஒரு குறுகிய வழியை உடைய ஆட்டுப்பட்டிக்குள் அடைக்கப்படும். தாயாடுகள் நுழைவாயிலில் நிறுத்தப் படும். நுழைவாயிலின் அருகில் நிறுத்தப்பட்ட மனிதன் ஒருவன் ஓக்ரேயில் (எண்ணையாக இருக்கலாம்) நனைக்கப்பட்ட கோலொன்றினால் ஒவ்வொரு பத்தாவது ஆட்டையும் தொட்டு அடையாளமிட்டு "இது பரிசுத்தமாய் இருக்கட்டும்" என்று கூறுவான். இந்த உருவகத்தையே எசேக்கியேல் பயன்படுத்தினார்: "கோலின் கீழ்ப்பட்ட ஆடு மாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது" (இ.வ. லேவி. 27:32; எரே. 33:13). அவர்கள் யாவரும் "கோலின் கீழ்ப்பட்டனர்" மற்றும் சாமுவேல் "பரிசுத்தவானாக" இருந்தார் என்பதை யாவரும் அறிந்துணரக் கடவோம்.*